**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,திருச்சுழி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,திருச்சுழி.
2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ம் நாள் செவ்வாய்கிழமை.
இடைநிலை மனு எண்.2/2022
இன்
அசல் வழக்கு 311/2021
*****

1. பிச்சையம்மாள்(லேட்)
2. ராமகிருஷ்ணன்
3. முருகேசன்
4. வீரியலட்சுமி
5. அரியநாயகம் ...மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள்

/எதிர்/

குழந்தை ஆனந்தம் ... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது 10.10.2022–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அன்றே இம்மனு கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.முத்துசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்...

**உத்தரவு**

**1.** உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் கடந்த 21.12.2021ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதார்கள்/2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல்.

G ABARNA Digitally signed by G ABARNA

<u>மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகளின் மனுவின் சுருக்கம்:–</u>

2. அசல் வழக்கில் 21.12.2021ம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்திற்காகவும், மேற்படி தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகத காரணத்திற்காகவும் மனுதாரர்/ 5ம் பிரதிவாதி தரப்பை பொறுத்து எக்ஸ்பார்டி உத்தரவு ஏற்பட்டுள்ளது. மேற்படி தேதியில் மனுதாரர்/ 5ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்கும் உடல் நிலை சரியில்லாமல் வைரஸ் காய்ச்சல் இருந்ததால் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞரை சந்தித்தோ வழக்கு நடத்த முடியவில்லை. அதனால் மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்திற்காக எக்ஸ்பார்டி உத்தரவு ஏற்பட்டு விட்டது. மேற்படி எங்கள்தரப்பை பொறுத்து ஏற்பட்டுள்ள எக்ஸ்பார்ட்டி உத்தரவு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே கடந்த 21.12.2021ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதார்கள்/2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல்.

<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

3. அசல் வழக்கில் 21.12.2021ம் தேதி மனுதாரும், மனுதாரின் சகோதர, சகோதரிகளுக்கும் உடல்நிலை சரியில்லாமல் வைரஸ் காய்ச்சல் இருந்தாக கூறுவது சுத்தப்பொய். 82 வயதான எதிர்மனுதார்/வாதி மதுரையில் இருந்து சாட்சி விசாரணைக்கா வந்திருந்தநிலையில் எதிர்மனுதார்/வாதியை அலைய வைக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள். எனவே மனுதார்களின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது.

<u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–</u>

4. இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா?

G ABARNA Digitally signed by G ABARNA

**<u>தீர்வு முடிவு:–</u>**

4. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததன் மூலமாக தெரிய வரும் சங்கதி என்னவெனில், 2 முதல் 5 பிரதிவாதிகள் கடந்த 21.12.2021ம் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், நீதிமன்றத்தில் ஆஜராக காரத்தினாலும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் மனுதாரர்/ 5ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்கும் உடல் நிலை சரியில்லாமல் வைரஸ் காய்ச்சல் இருந்ததால் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞரை சந்தித்தோ வழக்கு நடத்த முடியவில்லை என்றும், அதனால் மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்திற்காக எக்ஸ்பார்டி உத்தரவு ஏற்பட்டு விட்டது என்றும், மேற்படி தங்கள் தரப்பை பொறுத்து ஏற்பட்டுள்ள எக்ஸ்பார்ட்டி உத்தரவு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே கடந்த 21.12.2021ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதார்கள்/2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி வாதம் எடுத்துரைத்துள்ளனர்.

5. அசல் வழக்கில் மனுதாரர் வைரஸ் காய்ச்சல் காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதார்கள்/ 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல்நடத்த மனுதார்கள்/ 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதார்/வாதிக்கு அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் உளநிறைவடைகிறது. இருப்பினும், காலதாமதத்தால்

G ABARNA Digitally signed by G ABARNA

எதிர்மனுதாரர்/வாதிக்கு எற்பட்ட இன்னலை ஈடு செய்தவற்கு செலவுத் தொகையாக ரூ.1,000/−ஐ எதிர்மனுதார்/வாதிக்கு 30.11.2022−ஆம் தேதிக்குள் மனுதார்கள்/ 2 முதல் 5 பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது. தவறினால் இம்மனு தள்ளுபடியாகிவிடும்.

**இறுதிமுடிவு:−**

8. இறுதியாக, மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.1,000/−ஐ செலவுத் தொகையாக 30.11.2022 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும்.

அடுத்த வழக்கெடுப்பு நாள் 30.11.2022.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022−ஆம் ஆண்டு நவம்பர் 22 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ABARNA

Digitally signed by G ABARNA

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.